# உலக நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு (22.10.2023)

*"பற்றியெரியும் உள்ளங்கள், பயணப்படும் பாதங்கள்"*

*அன்புள்ள இறைமக்களே!*

நற்செய்தி அறிவிப்பின் ஆதாரமாகிய கிறிஸ்துவின் அன்பும் அவரது அருள்துணையும் என்றும் உங்களோடு இருப்பதாக!

இந்த ஆண்டின் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு சிந்தனைக்கான கருப்பொருளாக **புனித லூக்கா நற்செய்தியில்** இடம் பெறும் **எம்மாவு நோக்கிய பயண நிகழ்வை** (லூக். 24:13–36) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்வுச் செய்து "**பற்றியெரியும் உள்ளங்கள், பயணப்படும் பாதங்கள்**" என்ற தலைப்பில் சிந்திக்க நம்மை அழைக்கிறார்.

எம்மாவு நோக்கியப் பயணத்தின் போது மனக்குழப்பத்தில் இருந்த சீடர்களை இயேசு சந்தித்து, அவர்களுள் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களின் உள்ளங்களைப் பற்றி எரியச் செய்து உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்துக் கொள்ள மீண்டும் அவர்கள் எருசலேம் நோக்கிப் பயணித்தது எங்ஙனம் என்பதை திருத்தந்தை மூன்று நிகழ்வுகளாக விளக்குகிறார். அவற்றை தியானிப்பதன் மூலம் நம்முடைய இதயங்களிலும் தூதுரைக்கும் பணி ஆர்வத்தை புதுப்பிக்கின்றார்.

## 1. இறைவார்த்தை நம்மை ஒளிர்வித்து உருமாற்றிட அவருடன் பயணிப்போம்

இயேசு கொல்லப்பட்டு தோல்வியைத் தழுவினார் என்ற சிந்தனையால் மனச்சோர்வுற்ற சீடர்களை அவர் சந்திக்கின்றார்; உடன்பயணிக்கின்றார்; மறைநூலை விளக்குகின்றார்; அப்பம் பிடுதல் வழியாக அவர்களின் கண்களைத் திறக்கின்றார். அவர்களுடைய அவநம்பிக்கையை நீக்குகின்றார். அதுபோலவே இன்றும், நற்செய்திப் பணியில் நம்முள் எழும் தோல்வி, பயம், சந்தேகம், வலுவின்மை, நம்பிக்கை குறைபாடுகள் போன்றவற்றில் அவர் நம் அருகில் வந்து நம்முடன் பயணிப்பார். ஆகவே நாம் நம்பிக்கை இழந்து விடாமல் இருப்போமாக! (நற்செய்தியின் மகிழ்ச்சி, 86). தூதுரைப் பயணத்தால் எழும் பிரச்சனைகளை, கவலைகளை அவர் பார்த்துக் கொள்வார் (1பேதுரு 5:7). ஏனெனில் இது அவருடைய பணி. நாமோ அவருடைய உடன்பணியாளர்கள்; "பயனற்றப் பணியாளர்கள்" மட்டுமே (லூக். 17:10).

அன்று சீடர்களின் உள்ளம் பற்றி எரிந்தது போல நம்முடைய உள்ளமும் பற்றி எரிய வேண்டுமென்றால் நாமும் மறைநூலை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். புனித ஜெரோமின் கூற்றுப்படி "**மறைநூலை அறியாதவர் கிறிஸ்துவை அறியாதவர்**". மறைநூலின், அறிவை நாம் பெறாவிடின் இயேசு இவ்வுலகில் ஆற்றியப் பணிகள் பற்றியும் அதனைத் தொடர்ந்து திருஅவை ஆற்றியப் பணிகள் பற்றியும் அறிந்து கொள்ள இயலாது. மறைநூலை அறியாமல், கிறிஸ்துவை அறியாமல் நம் உள்ளம் பற்றி எரிந்திட முடியாது. அவ்வாறு பற்றி எரியாது புகைந்துப்போன நம் இதயத்திலிருந்து வெளிப்படும் சொந்தக் கருத்துக்களும் திட்டங்களும் மற்றவர்களின் இதயத்தைப் பற்றி எரிந்திடச் செய்ய முடியாது. ஆகவே, நம் பயணத்தில் இயேசுவை நம்முடன் அழைப்போம். அவர் தூயஆவி

அருளும் ஞானத்தை நமக்குப் பெற்றுத்தந்து இறைவார்த்தையால் நம்மை ஒளிர்வித்து உருமாற்றுவார்.

## 2. நற்கருணையில் உறையும் இயேசுவே நம் தூதுரைப் பணியின் ஊற்றும் உச்சமும்

'எங்களோடு தங்கும்' என அழைத்த சீடர்களுக்குச் செவிமடுத்த இயேசு அவர்களோடு தங்கி தூயஆவியின் அருளோடு அப்பத்தைப் பிடுகையில் அவர்களின் கண்களைத் திறந்தார். உடனே அவர்களிடமிருந்து மறைந்துப்போனார் (லூக் 24:31). அப்பமாக மாறிய இயேசுவை உண்ட அவர்களின் உள்ளத்தில் பற்றி எரிந்த அனுபவத்தை அறிவிக்க எருசலேம் நோக்கி திரும்பினர். ஆகவே திருப்பலியில் நற்கருணையை உண்ணுகின்ற ஒவ்வொரு மறைதூதுப் பணியாளரும் இயேசுவைப் போல அப்பமாக மாறி உலகிற்காக உடைபடும் அப்பமாய் உருவாகப் புறப்பட வேண்டும்.

பசியுற்றோருக்கு உணவைப் பகிர்ந்துக் கொடுப்பது தூதுரைப் பணியின் ஓர் அங்கமாய் இருப்பது போல அப்பம் பிடுதல் வழியாகத் திருப்பலியும் ஓர் உன்னதமான தூதுரைப் பணியாக மாறுகின்றது. **திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட்** அவர்களின் கூற்றுப்படி, "திருப்பலியில் நாம் கொண்டாடும் அருள்சாதன பேரன்பு தேங்கிய நீரோடையாய் நம்மில் மட்டும் தங்குகின்ற ஒன்றல்ல. மாறாக அது பிறரில் பாய்ந்தோடும் நீருற்றைப் போன்றதாகும். அதை உட்கொள்கின்ற தூதுரைப் பணியாளர்களை அந்த வற்றாத பேரன்பை பிறரோடு பகிர்ந்துக் கொள்ள பயணிக்கத் தூண்டுகிறது. ஆகவே திருஅவையின் வாழ்வில் நற்கருணை ஊற்றும் உச்சமுமாக இருப்பது போல தூதுரைப் பணி வாழ்விலும் அது ஊற்றும் உச்சமுமாக இருக்கிறது. நற்கருணையில் ஆழமாகவும், உண்மையாகவும் ஊறியத் திருஅவை தூதுரைக்கும் திருஅவை ஆகும்" (அன்பின் அருள்சாதனம், 84).

## 3. இளமைப் பொலிவுள்ள திருஅவை; எப்பொழுதும் பயணப்படும் திருஅவை

உயிர்த்த இயேசுவை மறைநூலிலும் (இறைவார்த்தையிலும்), நற்கருணையிலும் அனுபவிக்கின்ற ஒவ்வொருவரும் இயேசுவை பிறருக்கு அறிவிக்கும் ஆர்வத்தால் உந்தப்பட்டு புறப்படுகிறார்கள். "**பயணப்படும் பாதங்கள்**" என்பது உலகின் கடையெல்லை வரைக்கும் நற்செய்தி அறிவிப்புப் பணி தொடர்ந்து நடைபெறுவதை உறுதிப்படுத்துகிறது. பல்வேறு அநீத சூழல்கள், பிரிவினைகள் மற்றும் போர்களால் காயப்பட்ட இன்றைய மனிதக் குடும்பத்திற்கு மீட்பின் செய்தியை அறிவிப்பது இன்றையக் காலக்கட்டத்தில் மிக அதிகமாகவே தேவைப்படுகிறது. இந்தக் கடமையைக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட ஒன்றாக கருதாமல், மகிழ்வுடன் பணியாற்ற முன்வர வேண்டும். திருத்தந்தையின் தூதுரைப் பணி அமைப்புகள் ஆன்மீக உதவி மற்றும் நிதி உதவி வாயிலாக இந்தப் பொறுப்பை நம்மில் வளர்த்தெடுக்கிறது. எனவேதான் உலக நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு அன்று திரட்டப்படும் நன்கொடைகள் திருத்தந்தையின் நற்செய்தி அறிவிப்பு அமைப்பிடம் வழங்கக் கோரப்படுகிறது.

அமைதியின் செய்தியை அறிவிக்கும் இந்தச் செயல்பாடுகள் அகில உலகத் திருஅவை இன்று தொடங்கியுள்ள **இணைந்து பயணிக்கும் திருஅவை**

பயணத்தில் முக்கிய இலக்காக உள்ளது. **ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு** போன்ற செயல்முறைகள் வழியாக இயேசுவின் உடனிருப்பை காயப்பட்ட மனிதக் குடும்பத்திற்கு அறிவிக்க முனைகிறது. எனவே ஒளியூட்டப்பெற்ற கண்களை உடையவர்களாய், பற்றி எரியும் உள்ளம் கொண்டவராய் நலிந்தோரைத் தேடி இணைந்து பயணிப்போம். இறைவார்த்தையால் அவர்களின் உள்ளங்களை பற்றி எரியச் செய்வோம். நற்கருணையில் உறையும் இயேசுவின் கனிந்த உள்ளத்தை கண்டுக் கொள்ள அவர்களின் கண்களைத் திறப்போம்.

நமது கோட்டாறு திருஅவையும் புதிய கண் கொண்டுதான் நற்செய்தி அறிவிப்புப் பணியை பார்க்கிறது. காயப்பட்டோர் இயேசுவின் உடனிருப்பை உணர்ந்திடப் பல்வேறு பணித்திட்டங்களை வகுத்து முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**1. சந்திப்புக் குழுக்கள்:** பங்குகள், வட்டாரங்கள், மறைமாவட்டம் என பற்பல தளங்களில் தனித்து விடப்பட்டோர், நோயுற்றோர், சிறைப்பட்டோர், முதியோர், இளையோர், புதுமைப் பாலினத்தார், பிரிவினைச் சகோதரர்கள் ஆகியோரைச் சந்திக்க பல்வேறு சந்திப்புக் குழுக்களை உருவாக்கி நலிந்து, நலம் குன்றி, உறவு முறிந்து, உரிமை மறுக்கப்பட்டு, திருஅவையை விட்டு விலகி, தொடர்பை துண்டித்து காயப்பட்ட அனைவரையும் தனித்தும் மறைமாவட்டத்திலுள்ள பிற பணிக்குழுக்களோடு இணைந்தும் சந்தித்து, நற்செய்தியின் ஒளியில் அவர்களை ஆறுதல்படுத்தி ஆதரவு காட்டி அரவணைத்து கோட்டாறு திருஅவையின் முதன்மைகள், கரிசனைகள் பற்றிய புரிந்துணர்வை ஊட்டி உறவை புதுப்பித்து இணைந்து பயணிக்க, பணியாற்ற முனைப்புக் காட்டி வருகிறது.

**2. பயிற்சிப் பாசறைகள்:** இறைவார்த்தைச் செறிவோடு குழுக்கள் பணியாற்ற தியானங்கள், பயிற்சிப் பாசறைகள் வழியாக அவர்களில் இறைவனின் கருணை கனிந்திட, மெருகூட்டுகிறது.

**3. படைப்புகள்:** உலகின் கடையெல்லை வரை இவ்வன்புப் பணிகள் விரிந்து பரவிட மாதாந்திர பத்திரிகை, வெளியீடுகள் மற்றும் இணையதள செப உதவிகள் போன்றவற்றை முடுக்கிவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த உன்னதமானப் பணியினை உவப்புடன் செய்திட பணி ஆர்வமிக்க மூத்தோர், இளைஞர்கள், சிறார் இன்னும் வாய்ப்புள்ள அனைவரையும் இதயக் கதவுகளைத் திறந்து இன்முகத்தோடு வரவேற்கிறோம்.

மேலும் நற்செய்தி அறிவிப்பு பணிக்காக 22.10.2023 ஞாயிறன்று திருப்பலியின்போது பிரிகின்ற சிறப்பு காணிக்கை மற்றும் இதர நிகழ்வுகள் மூலம் பிரிகின்ற நன்கொடைகள் ஆகியவற்றை மறைமாவட்ட பொருளரிடம் ஒப்படைத்து, நற்செய்தி அறிவிப்பு பணியினை ஊக்கப்படுத்துமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*வழித்துணையின் அன்னையே! தூதுரைப் பணியின் அரசியாம் அன்னை மரியே! எங்களுக்காகப் பரிந்துபேசுவீராக!*

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**